# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **13099 / 2009** / எம்சி. **8** நாள் : **24.11.2009**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **30.11.2009** திங்கள்கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியாஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : **1**

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

24/11/09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்

## நவம்பர் 2009

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | பொருளடக்கம் |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள் |
| 1 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 2 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் வார்டு எண் 41- உக்கடம் நவீன மீன்மார்க்கெட் பகுதியில் கூடுதல் அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - Jnnurm – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - கிழக்கு மண்டலம் - கூடுதல் குப்பைக்கூடைகள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - Jnnurm – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - மேற்கு மண்டலம் - கூடுதல் குப்பைக்கூடைகள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - Jnnurm – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - வடக்கு மண்டலம் - கூடுதல் குப்பைக்கூடைகள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - Jnnurm – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - தெற்கு மண்டலம் - கூடுதல் குப்பைக்கூடைகள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 10 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 48- மலர் அங்காடி வளாகம் - கூடுதல் அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - திருச்சி சாலை- மின்கம்பங்கள் புதியதாக அமைத்தல் -நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்- தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு - 14 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 13 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 37 மற்றும் 38 – ஒப்பணக்கார வீதியில் நடைபாதை வசதி செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 65 – நல்லாம்பாளையம் - ரயில்வே பாலம் எண் 30 – சாலை வசதி செய்தல் ரயில்வே துறைக்கு கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - குமாரபாளையம் கிராமம் - க.ச.எண். 182/2E- பட்டா வழங்க ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 16 | நகரமைப்புப் பிரிவு - வடக்கு மண்டலம் - அனுப்பர்பாளையம் கிராமம் - நகரளவு எண் 34/8 – திரு அருண்மொழி மாணிக்கம் என்பவரது மனு- நில உபயோக மாற்றம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| 17 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வ.உ.சி. பூங்கா டாக்டர் நஞ்சப்பா ரோடு மைதானம் - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நீச்சல் குளம் கட்டுதல் - குத்தகைக்கு வழங்குதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 18 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் - நவீன கட்டண கழிப்பிடம் - ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 19 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் - இருசக்கர வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஏலதாரருக்கு ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 20 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண் 3- உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 21 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வ.உ.சி. பூங்கா –வண்ண மீன் காட்சியகம் - தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு குத்தகைக்கு விடுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 22 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - கிராஸ்கட் ரோடு- கடை எண் 1,2- ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்திற்கு பெயர் மாற்றம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 23 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - 2009-10 குத்தகை இனங்கள் - உச்சகேள்விதாரருக்கு ஒப்படைப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 24 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - 2010-13 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - நீக்கல் மற்றும் சேர்த்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 25 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் - உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 26 | சுகாதாரப் பிரிவு - பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் - வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பட்டியலில் பெயர் சேர்த்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - குடிநீர் விநியோக குழாய் பதித்தல் பணி - ரூ. 7.00 கோடி உத்தேச மதிப்பீடு – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |

நன்றியுரை

**அ) <u>திருக்குறள்</u>**

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.**

(குறள் -122)

**<u>விளக்கம்</u>**

**மிக்க உறுதியுடன் காக்கப்படவேண்டியது அடக்கமாகும். அடக்கத்தைவிட ஆக்கம் தரக்கூடியது வேறொன்றும் இல்லை.**

**திருவள்ளுவர்.**

---

**<u>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## சிறப்புத் தீர்மானம் எண் 1

அந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகம் ஈன்றெடுத்த தவப்புதல்வர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெரும் பங்காற்றினார். அந்தியத் துணி பகிஸ்கரிப்பு மற்றும் சுதேசி கொள்கைளகுக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்கினார். இந்திய வரலாற்றில் சுதேசி ஸ்டீம் நேவிகேசன் எனும் கப்பல் கம்பெனியை தொடங்கி தூத்துக்குடி துறைமுகத்திற்கும், இலங்கை துறைமுகத்துக்கும் இலங்கைக்கும் செலுத்தினார். கோரமில் தொழிலாளர் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். அவர்மீது வெள்ளையர் அரசு வழக்கு தொடுத்தது.

நாட்டை ஆண்ட வெள்ளையர் அரசு இரண்டு தீவாந்திர தண்டனை வழங்கியது. கோவை சிறையில் 1908 ஆண்டு முதல் 1910 வரை சிறையிலிருந்தார். அப்போது வெள்ளையர்கள் இந்திய வரலாற்றில் எங்கும் காணாததொரு சித்திரவதைகள் கொடுத்தனர்.

மாடு இழுத்து எண்ணை ஆட்டும் செக்கில் வ.உ.சி.யை வைத்து இழுக்க செய்தனர். அவர் இழுத்த செக்கு இன்றளவும் கோவை சிறையில் உள்ளது.

அந்த செக்கை பொதுமக்கள் அனைவரும் பார்த்து போற்றும் வண்ணம் வ.உ.சி. பூங்கா அருகில் அமைய உள்ள தாவரவியல் பூங்காவில் அமைத்துக்கொடுக்க தமிழக அரசை இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது.

<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 30.11.2009</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## சிறப்புத் தீர்மானம் எண் 2

பொருள் - உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டி மாநகரை அழகுறச் செய்ய வேண்டி தீர்மானத்தை மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றி கொடுக்க வேண்டுவது தொடர்பாக.

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெறுவதையொட்டி இம்மாநகரை அழகுறச் செய்ய வேண்டியது இம்மாநகராட்சியில் கடமை ஆகும். ஆனால் Jnnurm போன்ற திட்டங்களுக்கு மாநகராட்சியின் பங்களிப்பு 30% தொகை செலவு செய்யப்பட வேண்டி உள்ளதால் மாநகராட்சியில் நிதிச்சுமையைக் கருத்தில் கொண்டு நகரின் பிரதான சாலைகளான

1. அவினாசி சாலை
2. திருச்சி சாலை
3. மேட்டுப்பாளையம் சாலை
4. சத்தி சாலை மற்றும் முக்கிய பிரதான சாலைகளில்

நடைபாதை அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்க விருப்ப கேட்பு மனுவை (Expression of interest) பெற்று PPP முறையில் பணி மேற்கொள்ள இம்மாமன்றத்தில் மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கலாம்.

மேலும் மாநகரில் உள்ள அனைத்து போக்குவரத்து திடல்கள் (Traffic island ) சாலையோரப் பூங்காக்கள், சாலை மையத்தடுப்புகள் ஆகியவற்றை அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்க விருப்ப கேட்பு மனுவை ( Expression of interest) பெற்று பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தில் மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கலாம். இதற்கான தீர்மானத்தை மாமன்ற தி.முக. உறுப்பினர்கள் சார்பாக நிறைவேற்றி கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 30.11.2009</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூா் மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18-07-2008 மற்றும் 16-10-2008 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 20795/ 07/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வாா்டு எண் 37-க்குட்பட்ட சி.எம்.சி. காலனி சமுதாயக் கூடத்தில் சமையலறை மற்றும் உணவருந்தும் அறை கட்டுதல் | 25.00 | 08-07-08 முதல் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.94% அதிகம் |
| 2 | 20796/ 07/ எம்.டி.4 | தெற்கு மண்டலம் வாா்டு எண் 37-க்குட்பட்ட திருமால் வீதியில் உள்ள மாநகராட்சி கல்யாண மண்டபத்தில் ஏ.சி.சீட் கூரை அகற்றி ஆா்.சி.சி. கூரையாக மாற்றி அமைத்தல். | 11.50 | 28-08-08 முதல் அழைப்பு | திரு. என். குருவாயூரப்பன் | 4.96% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 20975/07/எம்.டி.2

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 112 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.10.2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீட்டுத் தோகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| பொது நிதி | | | | | | |
| 1 | 16160/07/ எம்.டி.4 | வாா்டு எண் 41 கனிராவுத்தா் வீதி மற்றும் ராமா் கோவில் வீதி சந்திப்பில் குளியல் அறை மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல் | 9.20 | 09-10-2009 மூன்றாம் அழைப்பு | திருமதி. வி.பாக்கியம் | 4.55 அதிகம் |
| 2 | 15215/07/ எம்.டி.4 | வாா்டு எண் 43 கெம்பட்டி காலனி 7-வது வீதியில் சித்த மருத்துவமனை கட்டுதல் | 6.80 | 09-10-2009 ஆறாவது அழைப்பு | திருமதி. வி.பாக்கியம் | 4.76 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> -வரிசை எண்.1 மற்றும் 2-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் **16160/07/**எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 113 நாள் : 30.11.2009</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், வார்டு எண்.41-க்குட்பட்ட உக்கடம் பகுதியில் புதியதாக நவீன மீன்மார்க்கெட் ரூ 137.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலும் சில கூடுதல் பணிகள் செய்ய மீன் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு அவர்களின் அறிவுரையின்படி மேற்கூரை அமைத்தல், புதிய மீன்கள் வெட்டுமிடம் அமைத்தல், பார்க்கிங் வசதிகள் செய்தல், தரைகள் (Flooring) அமைத்தல், மின்வசதிகள் செய்தல், குடி தண்ணீர் வசதிகள், மாடிப்படி கட்டுதல், அபிவிருத்தி பணிகள் மற்றும் கூடுதல் கழிப்பிட வசதிகள் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணிகள் செய்வதற்காக ரூ 75.00 இலட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் செய்வதற்காக ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 6703/ 2009/ எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 114 நாள் : 30.11.2009</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30-06-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்த தாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8364/08/ எம்.டி.4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.37, ஒப்பணக்கார வீதி மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கணினி அறை மற்றும் வகுப்பறைகள் கட்டுதல் | 21.20 | 20-02-09 முதல் அழைப்பு | திரு.எ. வெங்கடாசலம் | 4.58 அதிகம் | 2.37 அதிகம் |
| 2 | 16157/07/ எம்.டி.4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.43-ல் கெம்பட்டி காலனி மாநகராட்சி மேல்-நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டுதல் | 10.60 | 20-02-09 முதல் அழைப்பு | தி/ள் என்.பி.கே அசோசியேட்ஸ் | 4.80 அதிகம் | 3.49 அதிகம் |
| 3 | 11372/08/ எம்.டி.4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.54-ல் உக்கடம் கழிவுநீர் பண்ணை ஆடு அறுவைமனைக்கு சுற்றுசுவர் கட்டுதல் | 20.50 | 20-02-09 முதல் அழைப்பு | தி/ள் என்.பி.கே அசோசியேட்ஸ் | 4.82 அதிகம் | 3.66 அதிகம் |
| 4 | 16158/07/ எம்.டி.4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.43-ல் ஒக்கிலியர் காலனி பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிப்பகம் கட்டுதல் | 7.90 | 20-02-09 முதல் அழைப்பு | தி/ள் என்.பி.கே அசோசியேட்ஸ் | 4.88 அதிகம் | 3.55 அதிகம் |

மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் அனைத்தும் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தாலும், மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 8364/08/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மானம் எண் 115 நாள் : 30.11.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கடந்த 09-11-2009 மற்றும் 13-11-2009 அன்று திறனாய்வு செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைவுக்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10835/ 09/ எம்.டி.2 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்து வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கோள்ளுதல் | 43.50 | 04-11-09 முதல் அழைப்பு | தி/ள்.வரதன் இன்பிராஸ்ட்ரக்சர்ஸ், கோவை | 4.68% அதிகம் | 3.47% அதிகம் (ஒப்பந்தப் புள்ளி யினை ஏற்கலாம் என பரிந்துரை செய்து உள்ளது) |
| 2 | 10833/ 09/ எம்.டி.2 | வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்து வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கோள்ளுதல் | 72.00 | 04-11-09 முதல் அழைப்பு | தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோவை | 4.53% அதிகம் | 3.47% அதிகம் (ஒப்பந்தப் புள்ளி யினை ஏற்கலாம் என பரிந்துரை செய்து உள்ளது) |
| 3 | 10832/ 09/ எம்.டி.2 | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் மாதாந்திர ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்து வடிகால்களை சுத்தம் செய்தல் மற்றும் பொது சுகாதார பணிகளை மேற்கோள்ளுதல் | 51.50 | 04-11-09 முதல் அழைப்பு | தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் கோவை | 3.49% அதிகம் | 3.47% அதிகம் (ஒப்பந்தப் புள்ளி யினை ஏற்கலாம் என பரிந்துரை செய்து உள்ளது) |
| 4 | 11374/ 08/ எம்.டி.4 | தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 54-வது வார்டு உக்கடம் கழிவு நீர் பண்ணையில் ஆடுகள் அடைக்கும் மனை கூடுதலாக கட்டுதல் | 25.00 | 20-02-09 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ், கோவை | 4.73% அதிகம் | 3.56% அதிகம் (ஒப்பந்தப் புள்ளி யினை ஏற்கலாம் என பரிந்துரை செய்து உள்ளது) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> வரிசை எண்.1 முதல் 4 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதமாக பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற்று மேற்கோள்ளவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 10835/08/எம்.டி.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 116 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் உள்ள குடியிருப்புகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்வதற்கென மொத்தம் 4,58,000 எண்ணிக்கை (2,29,000 எண்ணிக்கை பச்சை மற்றும் 2,29,000 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வாங்கப்பட்ட குப்பைக் கூடைகளில் இம்மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் இது வரை 1,17,000 எண்ணிக்கை (58,500 எண்ணிக்கை பச்சை மற்றும் 58,500 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக்கூடைகள் குடியிருப்புகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம், இம்மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் புதிதாக கூடுதலாக அடுக்குமாடி குடியிருப்புகள், ஒரு சொத்துவரி விதிக்கப்பட்ட குடியிருப்பில் பல குடியிருப்புகள் போன்றவைகள் உருவாகியுள்ளதால் மேலும் கூடுதலாக 77,040 எண்ணிக்கை (38,500 எண்ணிக்கை பச்சை மற்றும் 38,500 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதென சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையினை உதவி நகர் நல அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதன் பேரில், மேற்படி கூடுதலாக தேவைப்படும் குப்பைக்கூடைகளை கொள்முதல் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.45,75,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 75 நாள். 23-10-2009-ல் பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

எனவே, மேற்கூறிய பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> அனுமதிக்கலாம் ந.க.எண் 11651/2009/vk].o.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 117 நாள் : 30.11.2009</u>

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண். 75 நாள் 23.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் உள்ள குடியிருப்புகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்வதற்கென மொத்தம் 4,58,000 எண்ணிக்கை (2,29,000 எண்ணிக்கை பச்சை மற்றும் 2,29,000 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வாங்கப்பட்ட குப்பைக் கூடைகளில் இம்மாநகராட்சியின் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் இது வரை 1,13,700 எண்ணிக்கை (56,850 எண்ணிக்கை பச்சை மற்றும் 56,850 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக்கூடைகள் குடியிருப்புகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம், இம்மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் புதிதாக கூடுதலாக அடுக்குமாடி குடியிருப்புகள், ஒரு சொத்து வரி விதிக்கப்பட்ட குடியிருப்பில் பல குடியிருப்புகள் போன்றவைகள் உருவாகியுள்ளதால் மேலும் கூடுதலாக 47,000 எண்ணிக்கை (23,500 எண்ணிக்கை பச்சை மற்றும் 23,500 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதென சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையினை உதவி நகர் நல அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதன் பேரில், மேற்படி கூடுதலாக தேவைப்படும் குப்பைக்கூடைகளை கொள்முதல் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.28,00,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 73 நாள். 23-10-2009-ல் பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

எனவே, மேற்கூறிய பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண் 11652/2009/vk].o.2

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 118 நாள் : 30.11.2009</u>

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண். 73 நாள் 23.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் உள்ள குடியிருப்புகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்வதற்கென மொத்தம் 4,58,000 எண்ணிக்கை (2,29,000 எண்ணிக்கை பச்சை மற்றும் 2,29,000 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வாங்கப்பட்ட குப்பைக் கூடைகளில் இம்மாநகராட்சியின் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் இது வரை 1,14,500 எண்ணிக்கை (57,250 எண்ணிக்கை பச்சை மற்றும் 57,250 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக்கூடைகள் குடியிருப்புகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம், இம்மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் புதிதாக கூடுதலாக அடுக்குமாடி குடியிருப்புகள், ஒரு சொத்து வரி விதிக்கப்பட்ட குடியிருப்பில் பல குடியிருப்புகள் போன்றவைகள் உருவாகியுள்ளதால் மேலும் கூடுதலாக 1,02,890 எண்ணிக்கை (51,445 எண்ணிக்கை பச்சை மற்றும் 51,445 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதென சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையினை உதவி நகர் நல அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதன் பேரில், மேற்படி கூடுதலாக தேவைப்படும் குப்பைக்கூடைகளை கொள்முதல் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.61,00,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 76 நாள். 23-10-2009-ல் பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

எனவே, மேற்கூறிய பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>- அனுமதிக்கலாம் ந.க.எண் 11653/2009/vk].o.2

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 119 நாள் : 30.11.2009</u>

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண். 76 நாள் 23.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 9**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் இம்மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் உள்ள குடியிருப்புகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்வதற்கென மொத்தம் 4,58,000 எண்ணிக்கை (2,29,000 எண்ணிக்கை பச்சை மற்றும் 2,29,000 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வாங்கப்பட்ட குப்பைக் கூடைகளில் இம்மாநகராட்சியின் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் இது வரை 1,12,800 எண்ணிக்கை (56,400 எண்ணிக்கை பச்சை மற்றும் 56,400 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக்கூடைகள் குடியிருப்புகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம், இம்மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் புதிதாக கூடுதலாக அடுக்குமாடி குடியிருப்புகள், ஒரு சொத்து வரி விதிக்கப்பட்ட குடியிருப்பில் பல குடியிருப்புகள் போன்றவைகள் உருவாகியுள்ளதால் மேலும் கூடுதலாக 24,500 எண்ணிக்கை (12,250 எண்ணிக்கை பச்சை மற்றும் 12,250 எண்ணிக்கை வெள்ளை) குப்பைக் கூடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதென சுகாதார ஆய்வாளர்களின் அறிக்கையினை உதவி நகர் நல அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதன் பேரில், மேற்படி கூடுதலாக தேவைப்படும் குப்பைக்கூடைகளை கொள்முதல் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14,60,000-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற சுகாதாரக்குழு தனது தீர்மான எண் 74 நாள். 23-10-2009-ல் பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது.

எனவே, மேற்கூறிய பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண் 11654/2009/vk].o.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 120 நாள் : 30.11.2009</u>

சுகாதார நிலைக்குழுவின் தீர்மானம் எண். 74 நாள் 23.10.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம், பொறியியல் பிரிவு எண் 1, வார்டு எண் 48-ல் புதியதாக கட்டப்பட்டுவரும் மலர் அங்காடி வளாகம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை எண் 35696/04 எம்.சி.பி1, நாள் 10.09.04-ன்படி ரூ. 80.15 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. முதல் இருமுறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் யாதொருவரும் பங்கேற்காததால் 2007-08-ம் ஆண்டு விலைவிபரப் பட்டியல்படி ரூ. 113.44 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திருத்திய நிர்வாக அனுமதி கோரப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வு 02.10.2009 அன்று நடைபெற்றது. அரசு ஆணை எண். 6/2008-ன்படி ரூ. 1 கோடி வரை மாமன்றமே நிர்வாக அனுமதி வழங்க அதிகாரம் உள்ளதாலும், ரூ. 15.01 இலட்சங்களுக்கான பணிகள் நடைபெறாமல் இருந்ததாலும், திருத்திய மதிப்பீடு ரூ. 113.44 இலட்சத்தில் ரூ. 15.01 இலட்சங்கள் போக மீதம் ரூ.98.43 இலட்சத்திற்கு மாமன்றத்தின் மூலம் நிர்வாக அனுமதி பெற்றுக்கொள்ள அறிவுறுத்தி 21.10.07 அன்று நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலக கடிதம் ந.க.எண். 18524/ 08/ MCA 3 மூலம் அறிவுறுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் ரூ. 98.43 இலட்சங்களுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதியும், ரூ. 113.44 இலட்சம் திருத்திய மதிப்பீட்டில் செய்யப்படாத பணிகளை தனியாக மதிப்பீடு தயாரித்து பணிகளை மேற்கொள்ளவும் மாமன்ற தீர்மான எண் 109 நாள் 30.10.09 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேலும் கூடுதலாக வாகன நிறுத்துமிடம் மற்றும் Polythene carbon sheet roof போன்றவைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டதற்காகவும், மலர் அங்காடி வளாகத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்காகவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 72.00 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 13308/09/MD4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 121 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள் - கோவை மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 6 மற்றும் 7-ல் திருச்சி சாலையில் என்.எச். 67 -பங்குச் சந்தை பரிவர்த்தனை மையம் முதல் ஒண்டிப்புதூர் மேம்பாலம் வரை சாலை விரிவாக்கப்பணி - மின்கம்பங்களை மாற்றியமைத்தல் - நிர்வாக அனுமதி –தொடர்பாக.

-------------

தேசிய நெடுஞ்சாலைத் துறையினர் தேசிய நெடுஞ்சாலை 67, திருச்சி சாலையில் பங்குச்சந்தை பரிவர்த்தனை மையம் முதல் ஒண்டிப்புதூர் மேம்பாலம் வரை நான்கு வழித்தடமாக புதியதாக சாலை விரிவாக்கப்பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணியின் பொருட்டு சாலையில் தற்போது அமைந்துள்ள மையத் தடுப்புச்சுவர் மாற்றியமைக்க வேண்டியுள்ளதால் அதில் அமைந்துள்ள பழைய மின்கம்பங்களை அகற்றி புதியதாக அமைக்கப்படவுள்ள மையத் தடுப்புச்சுவர் பகுதியில் மின் விளக்கு மற்றும் மின் கம்பங்களை அமைக்க வேண்டுமென தங்களது கடித எண் 5/எடிஇ/09/ஜே.டி.ஓ/ நாள் 05.10.09-ன்படி வேண்டியுள்ளனர்.

மேலும் தற்போது சாலை மையப் பகுதியில் அமைந்துள்ள 10 மீட்டர் உயரமுள்ள மின்கம்பங்கள் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள 2 x 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இவைகள் 10 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டவையாகும்.

எனவே தேசிய நெடுஞ்சாலைத்துறையினரின் வேண்டுகோளிற்கிணங்க ஏற்கனவே உள்ள பழுதடைந்த பழைய மின் கம்பங்களை அகற்றிவிட்டு புதியதாக மையப் பகுதியில் 10 மீட்டர் உயர மின் கம்பங்கள் மற்றும் 2 x 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் புதியதாக 151 எண்ணிக்கையில் அமைக்கவும், மேற்படி நான்கு வழித்தடத்தில் அமைந்துள்ள முக்கிய சாலை சந்திப்புகளில் 5 எண்ணிக்கையில் உயர்கோபுர மின் விளக்குகள் அமைக்கவும் ரூ. 180 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்காக நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கான ரூ. 1.80 கோடி மதிப்பீட்டினை அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரை செய்யலாம்.

ந.க.எண். 14854/2009/MD2

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 122 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கான மதிப்பீடு ரூ. 1.80 கோடிக்கு அரசின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பரிந்துறை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிசை மேம்பாட்டு அபிவிருத்தி திட்டத்தில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கடந்த 13-11-2009 அன்று திறனாய்வு செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 958/09/ எம்.டி.4 | வார்டு எண்-59 லிங்கனூர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 7.46 | 29-10-2009 ஆறாவது அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 4.15% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **2** | **189/09/ எம்.டி.4** | **வார்டு எண்-61 சுப்பிரமணியபுரம் பகுதியில் மழை நீர் வடிகால் கட்டுதல்** | **6.15** | **29-10-2009 ஆறாவது அழைப்பு** | **திருமதி. பி.லட்சுமி** | **4.87% அதிகம்** |
| **3** | **2225/09/ எம்.டி.2** | **வார்டு எண்-14 காந்தி நகர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **5.75** | **29-10-2009 ஆறாவது அழைப்பு** | **திருமதி.கே. ரேணுகா தேவி** | **4.94% அதிகம்** |
| **4** | **2024/09/ எம்.டி.2** | **வார்டு எண்-04 மதுரை வீரன் கோவில் வீதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **9.60** | **29-10-2009 ஆறாவது அழைப்பு** | **திரு.சி. சின்னப்பன்** | **4.97% அதிகம்** |
| **5** | **2061/09/ எம்.டி.2** | **வார்டு எண்-19 அருந்ததியர் வீதியில் மழை நீர் வடிகால் திரும்ப கட்டுதல்** | **6.20** | **29-10-2009 ஐந்தாவது அழைப்பு** | **திருமதி.வி. பாக்கியம்** | **4.89% அதிகம்** |
| **6** | **660/09/ எம்.டி.2** | **வார்டு எண்-02 நேரு நகர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **9.30** | **29-10-2009 ஆறாவது அழைப்பு** | **தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ்** | **4.42% அதிகம்** |
| **7** | **1026/09/ எம்.டி.2** | **வார்டு எண்-05 ஆஞ்சநேயர் காலனியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **8.30** | **29-10-2009 ஆறாவது அழைப்பு** | **திரு.ஆர். நடராசன்** | **4.85% அதிகம்** |
| **8** | **983/09/ எம்.டி.4** | **வார்டு எண்-58 காந்தி நகரில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **3.50** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **திருமதி. யு.மணி** | **4.04% அதிகம்** |
| **9** | **663/09/ எம்.டி.2** | **வார்டு எண்-02 நேரு நகரில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல்** | **3.00** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **திரு.என். முருகேசன்** | **4.76% அதிகம்** |
| **10** | **970/09/ எம்.டி.2** | **வார்டு எண்-01 பொரிகடை சந்தில் சிமெண்ட் கான்கீரிட் தளம் திரும்ப அமைத்தல்** | **2.40** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **திரு.என். முருகேசன்** | **4.39% அதிகம்** |
| **11** | **977/09/ எம்.டி.2** | **வார்டு எண்-66 காமராஜபுரம் பகுதியில் சிமெண்ட் கான்கீரிட் தளம் திரும்ப அமைத்தல்** | **0.75** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **தி/ள்.செந்தில் & கோ (உடையாம்பாளையம்)** | **4.73% அதிகம்** |
| **12** | **940/09/ எம்.டி.4** | **வார்டு எண்-60, 61 புவனேஸ்வரி நகரில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல்** | **2.30** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **திருமதி. யு.மணி** | **4.84% அதிகம்** |
| **13** | **942/09/ எம்.டி.2** | **வார்டு எண்-60, 61 புவனேஸ்வரி நகரில் குடிநீர் குழாய் பதித்தல்** | **1.90** | **30-10-2009 ஆறாவது அழைப்பு** | **திரு.ஏ. நாச்சிமுத்து** | **3.51% அதிகம்** |
| **14** | **2088/09/ எம்.டி.2** | **வார்டு எண்-05 அன்னை சத்தியா நகரில் மழை நீர் வடிகால் திரும்ப கட்டுதல்** | **11.20** | **12-11-2009 ஐந்தாவது அழைப்பு** | **தி/ள். எம்.எஸ். இன்ஜினியர்ஸ்** | **1.27% அதிகம்** |

**மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு-** **வரிசை எண்.1 முதல் 14 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம்**

பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற்று மேற்கோள்ளவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 958/08/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 123 நாள் : 30.11.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 13**

பொருள் - கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண் 37 மற்றும் 38-ல் ஒப்பணக்கார வீதியில் சாலையின் இருபுறமும் சாலை ஓர நடைபாதை வசதி ஏற்படுத்துதல் - மதிப்பீடு ரூ. 75,00,000-

-----------

மேற்கண்ட பொருளின்படி கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 37 மற்றும் 38- பெரியகடைவீதி சந்திப்பு தொடங்கி மில்ரோடு சாலை சந்திப்பு வரை அமைந்துள்ள மழைநீர் வடிகாலின் உட்புறம் சகதிகள் அடைபட்டும் மேலும் வடிகாலின்மீது உள்ள மூடுபலகைகள் உடைந்தும் உள்ளது.

இம்மழைநீர் வடிகாலானது கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்டவை. மேலும் இச்சாலையானது வணிக வளாகங்கள் நிறைந்த பொதுமக்கள் நடந்து செல்லும் சாலையாக உள்ளது. இதனால் சாலையின் ஓரத்தில் பொதுமக்கள் நடந்து செல்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும் வருகின்ற ஜுன் மாதம் நடைபெறும் உலக தமிழ் மாநாட்டினைக் கருத்தில் கொண்டும் இச்சாலையில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலினை தூர்வாரி, ஆங்காங்கே சிதலமடைந்த மழைநீர் வடிகாலினை புதுப்பித்து, மூடுபலகை அமைத்து அதன் மேலும் அருகிலும் நடைபாதை வசதி ஏற்படுத்துவது மிகவும் அத்தியா அவசியமாகிறது. எனவே இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 75,00,000-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பணியின் அத்தியா அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் கருத்தில்கொண்டு இப்பணியினை செய்ய மதிப்பீடு ரூ. 75,00,000-க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 12984/09/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 124 நாள் : 30.11.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 14**

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் வார்டு எண். 65க்குட்பட்ட நல்லாம்பாளையம் சாலையில் ரயில்வே பாலம் எண்.30 (கி.மீ 3/2-3)ன் கீழ் சாலை அமைக்கும் பணிக்கு பாலக்காடு டிவிசனல் ரயில்வே மேனேஜர் அவர்களின் கடித எண்.J/W/71/9. நாள்.27-11-2000 & 02-12-2000ன் உத்திரவின்படி பாலத்தின் இருபுறமும் பணி முடிவடைந்துள்ளது.

ரயில்வே லைன் கீழ் பாலத்தின் சாலை இணைப்பு செய்ய பணிகள் நடைபெறும் பொழுது ரயில்வே முதன்மை பொறியாளர் (சி.பி.இ) அவர்கள் 23-07-2002ல் நேராய்வு செய்த பொழுது தலைமை பொறியாளர் (பாலம்) சென்னை அவர்களின் அனுமதி பெறவில்லை எனக்கூறி ரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் பணியை நிறுத்த கூறியதின் பேரில் பணி நிறுத்தப்பட்டது. மீண்டும் அனுமதி வேண்டி கடித வரைவு அனுப்பப்பட்டது.

ரயில்வே நிர்வாகத்தின் கடித எண். J/W/71/9/Vol.II நாள் 27-02-2003ன்படி ரூ.10,49,723/-ஐ வழி உபயோகப்படுத்தும் கட்டணம் (Way Leave Charges) மற்றும் பராமரிப்பு கட்டணம் செலுத்தும்படி ரயில்வே மேனேஜர் அவர்கள் தெரிவித்து மாநகராட்சியின் இசைவு கடிதம் கேட்டுக் கொண்டதன் பேரில், மேற்கண்ட தொகையை ரூ.10,49,723/-ஐ செலுத்த மாமன்றம் தனது தீர்மான எண்.94 நாள்.27-06-2003ல் அனுமதியளித்துள்ளது. மாநகராட்சி கடித எண்.1488/98/டி2. நாள்.07-07-2003-ல் டிவிசனல் ரயில்வே மேனேஜர் அவர்களுக்கு மாமன்ற தீர்மானத்துடன் இசைவு கடிதம் அனுப்பிய பிறகு டிவிசனல் ரயில்வே மேனேஜர் பாலக்காடு அவர்களிடமிருந்து எந்த பதிலும் பெறப்படவில்லை.

பாலக்காடு ரயில்வே டிவிசனிலிருந்து கோவை பிரிக்கப்பட்டு புதிதாக சேலம் ரயில்வே டிவிசன் துவங்கப்பட்டதற்கு பிறகு கோவை அதில் சேர்க்கப்பட்டது. மீண்டும் 11-02-2009ல் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பிறகு சேலம் டிவிசனல் ரயில்வே மேனேஜர் அவர்கள் கோவைக்கு 21-07-2009 அன்று ஆய்விற்கு வந்த பொழுது நேரிடையாக ஏற்கனவே வழங்கப்பட்ட உத்திரவுகள் கொண்ட கடிதங்களை கொடுக்கப்பட்டது. சேலம் டிவிசனல்

ரயில்வே மேனேஜர் அவர்கள் அறிவுரையின் பேரில், கோட்டப் போறியாளர் அவர்கள் ஆய்வு செய்து விட்டு பாலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என தெரிவித்தனர். ரயில்வே நிர்வாகம் தெரிவித்த மாற்றங்கள் செய்து தரப்படும் என 10-08-2009ம் தேதி ரயில்வே மேனேஜர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதன்படி ரயில்வே துறையிடமிருந்து, சேலம் கோட்டம் டிவிசனல் ரயில்வே மேனேஜர்/ பணிகள்/ சேலம் அவர்கள் கடித எண்.SA/W372/ நாள்.29-10-2009-ல் நல்லாம்பாளையம் சாலையில் ரயில்வே பாலம் எண்.30ன் கீழ் கான்கிரீட் சாலை அமைக்கவும் மாநகராட்சி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்குரிய கட்டணத்தொகை ரூ.14,59,923/- Sr.Divisional Cashier (Pay), Southern Railway, Salem-5 என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்படவேண்டும் என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி கட்டணத்தொகை ரூ.14,53,923/-ஐ ரயில்வே துறைக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> அனுமதிக்கலாம் எண்.1488/98/எம்.டி.2(டி.2.வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 125 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 15

பொருள் :கோவை மாநகராட்சி–மேற்கு மண்டலம் -குமாரபாளையம் கிராமம் க.ச.எண். 182/2E பட்டா வழங்க ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல் தொடர்பாக

-------------

கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.55 குமாரபாளையம் கிராமம் க.ச.எண்.182/2E, அண்ணா பாதை, கதவு எண்.90/361 குமாரபாளையம் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் திரு.மு.இராசேந்திரன் என்பவர் தனது 07.09.2009-ம் தேதியிட்ட விண்ணப்பத்தில் மேற்காண் முகவரியில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருவதாகவும், மேற்படி மனைக்கு பட்டா வழங்கிட ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் தமது 08.09.2009-ம் தேதியிட்ட கடிதத்தில் குமாரபாளையம் கிராமம் புல எண்.182/2E களர் புறம்போக்கில் வீடுகட்டி வசித்து வரும் திருமதி. திரௌபதி என்பவருக்கு அரசாணை எண்.854-ன் படி வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனவும் பட்டா வழங்கிட மாநகராட்சி தீர்மான நகலினை அனுப்பி வைக்குமாறும் கோரியுள்ளார்.

பட்டா வழங்க உத்தேசித்துள்ள இடம் வருவாய் துறைக்கு சொந்தமானது ஆகும். இதன் பரப்பளவு 40 சதுர மீட்டர். இப்பகுதி குமாரபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.9 பகுதியில் அமைகிறது. சாலை விஸ்தரிப்பு எதுவும் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலர் அரசாணை எண்.854-ன்படி திருமதி. திரௌபதி என்பவருக்கு குமாரபாளையம் கிராமம் புல எண் 182/2E பகுதியில் பட்டா வழங்க பரிந்துரை செய்துள்ளதின் அடிப்படையில் பட்டா வழங்குவது தொடர்பாக மாநகராட்சியால் ஆட்சேபனையின்மை சான்று வழங்க முடிவு செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் தனது தீர்மான எண்.77 நாள்.3.11.2009-ன் மூலம் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - மாமன்றத்தின் ஒப்புதலுக்கு. ந.க.எண்.9033/2009/எச்-1 (மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 126 நாள் : 30.11.2009</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 77 நாள். 3.11.2009ஐ ஏற்று மாவட்ட வருவாய் அலுவலர் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குமாரபாளையம் கிராமம் புல எண். 182/2E களர்புறம்போக்கில் பட்டா வழங்கிட மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், தேர்தல் வார்டு எண்.31, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம் பகுதி, அனுப்பர்பாளையம் கிராமம், வருவாய் வார்டு எண்.-9(1), பிளாக் எண்.3, நகரளவு எண்.34/8 பகுதியில் உள்ள 4355.50 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் மனுதாரர் திரு. அருண்மொழி மாணிக்கம் (பவர் ஏஜெண்ட்) என்பவரால் ஹோட்டல் மற்றும் லாட்ஜிங் கொண்ட கட்டிடம் கட்ட, நில உபயோக மாற்றம் செய்ய கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடம் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டம் எண்.4-ன்படி குடியிருப்பு உபயோகத்தில் உள்ளது. மேற்படி மனைக்கு கிராஸ்கட் சாலை எனும் நெடுஞ்சாலைத்துறையினை சார்ந்த சாலையில் இருந்து 30' அடி அகல அணுகு பாதை உள்ளது. மேலும் மனைக்கு மேற்புறம் 23' அடி அகல, மாநகராட்சி சாலையும் உள்ளது, இம்மனைக்கு வியாபார நோக்க கட்டிடங்கள் உள்ளது. மேலும் மனுதாரர் உத்தேச கட்டிடம் குறித்து தீயணைப்பு துறை சான்றிதழ் இணைத்துள்ளார். மனையிடம் திறவிடமாக உள்ளது. உரிய வரைபடம், நகரளவையர் குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடம் அமையும் பகுதி குடியிருப்பிற்கு ஏற்றதாக அல்லாமல் சுற்றிலும் வணிக உபயோக பகுதியாக அமைந்துள்ளதால் மேற்கண்ட உத்தேச மனையினை குடியிருப்பு உபயோகத்திலிருந்து, வணிக உபயோக பகுதியாக நில உபயோக மாற்றம் செய்வது குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மான எண்.78, தேதி 03.11.2009-ல் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. இதனை மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.5797/2009/எச்2(வ)

மாநகர மன்ற தீர்மானம் எண் 127 நாள் : 30.11.2009

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மானம் எண். 78 நாள். 03.11.2009ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 17**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்கா Dr. நஞ்சப்பா ரோடு மைதானத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம், சர்வதேச அளவிலான நீச்சல் குளம் கட்ட அனுமதி கோரியதின் அடிப்படையில், மாமன்ற தீர்மான எண்.20 நாள் 20.06.09ல், இட உரிமை மாநகராட்சி வசம் மட்டுமே இருக்க வேண்டும். வணிக உபயோக கட்டிடங்கள் ஏதும் விளையாட்டு ஆணையத்தால் கட்டக்கூடாது. நீச்சல் குளம் பராமரிப்பு பற்றிய குழுவில் மாநகராட்சியின் பிரதிதித்துவம் சமஅளவில் இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகளுடன் மேற்குறிப்பிட்டுள்ள 1.36 ஏக்கர் அளவுள்ள Dr.நஞ்சப்பா ரோடு மைதானத்தில் உலகத்தரம் வாய்ந்த நீச்சல் குளம் கட்ட தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்திற்கு அனுமதி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மாநகராட்சி இடத்தினை மேற்குறிப்பிட்டுள்ள துறைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ச.அடி ஒன்றுக்கு ரூ.24.60/- வீதம் மேற்படி இடத்தின் மொத்த அளவிலான 57706 ச.அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.14,19,568/– வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்படி நீச்சல் குளமானது ரூ.175 இலட்சங்கள் செலவில் விளையாட்டு ஆணையம் மூலம் கட்டப்பட உள்ளதாலும் இதற்கு மாநகராட்சிக்கு மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய தொகையான ரூ.14,19,568/– ஆனது மிகவும் அதிகமாக உள்ளதாலும், மேற்படி துறையிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய வாடகைத் தொகையினை நிர்ணயம் செய்யவும், அதனடிப்படையில் நீண்டகால குத்தகையாக 20 ஆண்டுகளுக்கு குத்தகை வழங்குவதற்கு அரசின் அனுமதிக்கு பிரேரனை அனுப்புவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> அரசின் பரிந்துரைக்கு அனுப்பலாம். ந.க.எண். 2992/2009/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 128 நாள் : 30.11.2009</u>

1. மாநகர மன்ற தீர்மானம் எண். 20 நாள் 22.6.09ல் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளுடன், பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சி நிலத்தினை நீண்டகால குத்தகை அடிப்படையில் 20 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. பொதுப்பணித்துறை வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் வாடகை மிகவும் அதிகமாக இருப்பதனாலும், உத்தேசிக்கப்பட்டுள்ள நீச்சல்குளம் கட்டுமானம் முழுவதும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய மாதாந்திர / வருடாந்திர வாடகையினை நிர்ணயம் செய்ய அரசைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

பொருள் எண் 18

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் உட்புறம் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2010 வரையிலான காலங்களுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு 04.11.2009ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏலவைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ.எண் | பெயர் | ஏலத்தொகை நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | திரு. சி.எச். கண்ணன் | ரூ.2100/— |
| 2. | திரு. எஸ். வேலுச்சாமி | ரூ.2250/— |
| 3. | திரு. உமர்பாரூக் | கலந்து கொள்ளவில்லை |
| 4. | திரு. ஜி. ஜெயக்குமார் | ரூ.2200/— |
| 5. | திரு. எம்.ஏ. சிராஜுதின் | ரூ.2150/— |

மேற்படி ஏலதாரர்களில் திரு. எஸ். வேலுச்சாமி என்பவர் உயர்ந்தபட்சமாக நாள் ஒன்றுக்கு ரூ.2250/— என ஏல கோரிக்கை கோரியுள்ளார். மேற்படி தொகையானது காந்திபுரம் நகர பேருந்து நிலையம் ஆர்.வி ஹோட்டல் எதிரில் உள்ள கழிப்பிடத்தின் 2009—2010 ஆம் ஆண்டு ஏலத்தொகை நாள் ஒன்றுக்கு ரூ.1750/—னை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

எனவே மேற்படி திரு. எஸ்.வேலுசாமி என்பவரின் உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை ஏற்று மேற்படி கட்டண கழிப்பிடத்தின் உரிமையினை 31.03.2010 வரை ஒப்படை செய்வதற்கு அவசர அவசியத்தை கருதி வரி விதிப்பு மற்றும் நிதி குழுவின் முன் அனுமதி பெறப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>அனுமதிக்கலாம் ந.க.எண்.9431/2008/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 129 நாள் : 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

பொருள் எண் 19

பொருள்: உரிம இனங்கள் – கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் – 2009–2010ம் ஆண்டிற்கான உரிம இனங்கள் – பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு ஒப்படை செய்ய அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

***********

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2009–2010ம் ஆண்டுக்கான வருடாந்திர உரிம இனமான காந்திபுரம் நகரப்பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கோரப்பட்டுள்ள உயர்ந்தபட்ச கேள்வித்தொகை ரூ.5,82,000 – திரு.எம்.ஹரிகிருஷ்ணன் என்பவரால் நான்காம் முறையாக 02.06.2009 அன்று நடைபெற்ற மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கேட்கப்பட்ட தொகையாகும்.

இத்தொகையானது, சென்ற ஆண்டு ஏலத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையைவிடக் குறைவாக உள்ளது. இவ்வினத்தினை பொறுத்தவரை நான்கு முறை ஏலத்தில் கொண்டு வந்தும் இத்தொகைக்கு மேல் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மேலும் துறைமூலம் 26.11.2008 முதல் 08.06.2009 முடிய வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.3,15,667/– ஆகும். இதில் 01.04.2009 முதல் 08.06.2009 முடிய வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.1,11,211/–. இவ்வினத்திற்கு மூன்று துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டால் மாதமொன்றுக்கு சராசரியாக ரூ.22,000/– வீதம் ஓராண்டிற்கு ரூ.2,64,000/– ஊதியமாக மட்டும் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும் இப்பகுதியில் மாநகராட்சி அண்ணா வணிக வளாகக் கடை உரிமதாரர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கென ஒரு பகுதி இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகைக்கு மேல் ஏலம் கோர ஒருவரும் முன்வராத காரணத்தினாலும் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி உயர்ந்தபட்ச கேள்வித்தொகையான ரூ.5,82,000/–னை ஏற்று எம்.ஹரிகிருஷ்ணன் என்பவருக்கு ஒப்படை செய்யவும்,

மேலும் மற்றொரு வருடாந்திர குத்தகை இனமான அவினாசி ரோடு பாஸ்போர்ட் அலுவலகத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் 2009–10ம் ஆண்டில் புதிதாக ஏலம் விடப்படுகிறது. இந்த இனமும் நான்கு முறை ஏலத்தில் கொண்டு வந்ததில் அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ.90,000–க்கு நான்காம் முறையாக 02.06.2009 அன்று நடைபெற்ற மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.எம்.ஏ.சபேர் அலி என்பவரால் அதிகப்பட்ச ஏலக்கோரிக்கையாக பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட இடமானது மத்திய அரசு அலுவலகம் என்பதால், அரசு விடுமுறை நாட்கள் வார விடுமுறை நாட்கள் (சனி மற்றும் ஞாயிறு) தவிர மீதி நாட்களுக்கு ஒப்படை செய்யப்படும் நாள் முதல் மேற்படி உயர்ந்தபட்ச கேள்வித் தொகையான ரூ.90,000–னை ஏற்று திரு.எம்.ஏ.சபேர் அலி என்பவருக்கு ஒப்படை செய்வது குறித்தும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 6 நாள். 29.10.09 மூலம் மேற்படி இரு இனங்களின் ஏல கோரிக்கையினை ஏற்று ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 9431 / 2008 /அ5

மாநகர மன்ற தீர்மானம் எண் 130 நாள் : 30.11.2009

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 6 நாள். 29.10.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

மாமன்ற தீர்மான எண்.104 நாள் 30.10.2009-ம் தேதிய தீர்மானத்தில் கூறியுள்ளபடி புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 3-றகு 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை உயர்வு வெளிச்சந்தை வாடகை மதிப்போடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருப்பதால் விரிவான ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பொருள் குறித்து விளக்கம் சமர்ப்பிக்கப்படுகிறது.

வரித்தண்டலர் தமது 30.07.2009-ம் தேதிய குறிப்பில் வார்டு 22, புலியகுளம் பகுதியில் தனியார் கடைகளுக்கு வசூல் செய்யப்படும் வாடகை விபரம் கீழ்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.

1. சிட்டி டைல்ஸ் புட்வேர் 16 x 14 = 224 சதுரடி - ரூ. 2,450/-
   (1 சதுரடிக்கு ரூ.10.93)

2. சரண்மா ஹார்டுவேர்ஸ் 14 x 16 = 224 சதுரடி - ரூ. 2,400/-
   ( 1 சதுரடிக்கு ரூ.10.71)

இதன்படி வெளிச்சந்தை வாடகை மதிப்பில் ஒரு சதுரடிக்கு ரூ.10.93/- என 224 சதுரடிக்கு ரூ.2450/- எனவும் ஒரு சதுரடிக்கு ரூ.10.71/- என 224 சதுரடிக்கு ரூ.2400/- எனவும் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண்.3-ன் மொத்த சதுரடி 10' x 11' = 110 சதுரடி ஆகும். அதிகபட்சமாக ஒரு சதுரடிக்கு ரூ.10.93/- x 110 சதுரடிக்கு ரூ.1202/- ஆகும். எனவே மேற்குறிப்பிட்ட வணிக வளாக கடை எண். 3-ன் சதுரடி குறைவாக உள்ளதால் வாடகை மதிப்பு குறைவாக உள்ளது.

| கடை எண் | பெயர் | கடையின் மொத்த சதுரடி | சந்தை மதிப்பின்படி ஒரு சதுரடிக்கு ரூ | தற்போதைய மாத வாடகை ரூ | 15% உயர்வு செய்த தொகை ரூ | சந்தை நிலவரப்படி மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 3 | எஸ். குமாரசாமி | 110 | 10.93 | 1898 | 2183 | 1202 |

எனவே மேற்படி கடைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டால், பெறப்படும் உரிமக் கட்டணத் தொகையைவிட தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15% உயர்வு செய்யப்பட்டால், பெறப்படும் உரிமக் கட்டணத் தொகை கூடுதலாக உள்ளதால், 15% உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக்காலம் 01.10.2009 முதல் 30.09.2012 வரையிலான மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிப்பு செய்யலாம்.

எனவே, அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.10099/2009/ கிஅ11

### மாநகர மன்ற தீர்மானம் எண் 131 நாள் : 30.11.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி பூங்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வண்ண மீன் காட்சியகத்தினை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு பொதுப்பணித்துறையின் வழிகாட்டி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்து நீண்ட கால குத்தகைக்கு வழங்க மாமன்ற தீர்மான எண்.336 நாள். 29.01.2009ல் ஒப்புதல் பெற்று அரசிற்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடிதத்தில் மேற்படி இடத்தினை நீண்டகால குத்தகைக்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ள காலக்கெடு நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதி பெற்றும், மேலும் இதனை குத்தகைக்கு விடுவதால் ஆண்டு

ஒன்றுக்கு மாநகராட்சிக்கு உத்தேசமாக எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்ற விபரத்தினையும் அளிக்க கோரியுள்ளார்.

எனவே வ.உ.சி பூங்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வண்ண மீன் காட்சியக கட்டிடத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் மூலம் வண்ண மீன் காட்சியகம் அமைத்துக் கொள்வதற்கும் மற்றும் இக்கட்டிடத்திற்கு அருகில் உள்ள 300 சதுரடி காலியிடத்திற்கும் பொதுப்பணித்துறை வழிகாட்டி மதிப்பின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வருடம் ஒன்றுக்கு ரூ. 2,12,340/– என்ற வாடகை அடிப்படையில் 20 ஆண்டுகால குத்தகைக்கு வழங்குவதற்கும் முதல் வருடத்திற்கு பின்பு ஒவ்வொரு வருடமும் முந்தைய ஆண்டு தொகையிலிருந்து 5% கூடுதலாக வாடகை உயர்வு செய்திடவும் அரசின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>- அரசின் ஒப்புதலுக்கு அனுப்பலாம். ந.க.எண். 94 /2009/அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 132 நாள் : 30.11.2009</u>

1. பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வண்ணமீன் காட்சியக கட்டிடம் மற்றும் இக்கட்டிடத்திற்கு அருகில் உள்ள 300 சதுரடி காலியிடத்தினையும் வண்ண மீன் காட்சியகம் அமைக்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் 20 ஆண்டுகளுக்கு வழங்க அரசிற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. வருடாந்திர வாடகையாக முதல் வருடத்திற்கு ரூ. 2,12,340- (ரூபாய் இரண்டு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து முந்நூற்று நாற்பது) ம், பின்பு ஒவ்வொரு வருடமும் முந்தைய ஆண்டு வாடகைத் தொகையில் 5% உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் அரசிற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்குமண்டலம் காந்திபுரம், கிராஸ்கட் ரோடு கடை எண்.1 மற்றும் கடை எண்.2ன் உரிமதாரர்களான திரு. ஜெயக்குமார், திரு. சதீஸ்கராடி ஆகியோர் கடைகளை தொடர்ந்து நடத்தாமல் சென்று விட்டதால் மேற்கண்ட கடைகளை தற்போது நடத்திவரும் ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தார் அவர்களின் பெயரில், அரசு ஆணை எண்.92, நாள்:03.07.2007-ன்படி, பாராளுமன்ற தேர்தல் காரணமாக தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தால் ஆணையாளர் அவர்களின் 06.05.2009-ன் உத்திரவு பெற்று கீழ்கண்ட தொகை வசூல் செய்யப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

<u>கடை எண். 1</u>

| | | |
|---|---|---|
| 12 மாத வாடகை முன்பணம் | ரூ.15525 X 12 | = ரூ.1,86,300/- |
| பெயர் மாற்றத்திற்கான கட்டணம் | ரூ.15525 X 12 | = ரூ.1,86,300/- |
| பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் | | = ரூ. 500/- |
| மொத்தம் | | = ரூ.3,73,100/- |

<u>கடை எண். 2</u>

| | | |
|---|---|---|
| 12 மாத வாடகை முன்பணம் | ரூ.17020 X 12 | = ரூ.2,04,240/- |
| பெயர் மாற்றத்திற்கான கட்டணம் | ரூ.17020 X 12 | = ரூ.2,04,240/- |
| பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் | | = ரூ. 500/- |
| மொத்தம் | | = ரூ.4,08,980/- |

மேற்கண்ட கடை பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.8, நாள்: 29.10.09 ஒப்புதல் அளித்துள்ளது. இதனை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 01950/2009/பி1(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 133 நாள் : 30.11.2009</u>

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 8 நாள். 29.10.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

## பொருள் எண் 23

**கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் 2009-10ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் இனம் எண்.1. நவீன கட்டண கழிப்பிடம், கணபதி இனம் எண்.5, ஆடு, மாடு அறுவைமனை, சத்திரோடு ஆகியவைகளுக்கு 17.09.09-ம் தேதியில் குறுகியகால மறுபொது ஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஏலத்தில் கலந்து கொண்டு உச்ச கேள்விகள் கேட்டவர்கள் விபரம் வருமாறு.**

| இனம் எண். | ஏல இனங்கள் | ஏலதாரா்கள் பெயா் | கேட்கப்பட்ட ஏலத் தொகை (1 வருட காலத்திற்கு) ரூ | ஏலத்தில் கேட்கப்பட்ட உச்ச கேள்வி ரூ | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ | மூன்றாண்டு சராசரி ஏலத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1. | நவீன கட்டண கழிப்பிடம் - கணபதி | 1. பிரைட் டிரேடா்ஸ் | 3,22,500 | - | | |
| | | 2. M.A. சபேர் அலி | 3,25,200 | | | |
| | | **3. C.R. வினாயகம்** | **3,25,500** | **3,25,500** | **3,21,500** | **3,66,089** |
| | | 4. முனியாண்டி | 3,22,600 | | | |
| | | 5. R. சுப்புராஜ் | 2,52,000 (ஒப்பந்தப்புள்ளி) | | | |
| | | 6. முனியாண்டி | 3,11,000 (ஒப்பந்தப்புள்ளி) | | | |
| 5. | ஆடு,மாடு அறுவை மனை, சத்தி ரோடு | 1. பிரைட் டிரேடா்ஸ் | 2,11,100 | | | |
| | | **2. A. அஸ்கா்அலி** | **2,11,200** | **2,11,200** | **2,07,000** | **2,78,667** |
| | | ஒப்பந்தப்புள்ளிகள் | இல்லை | | | |

**இனம் எண்.1-க்கு திரு. C.R. வினாயகம் என்பவரால் கேட்கப்பட்ட ஏல உச்ச கேள்வியான ரூ.3,25,500/- கடந்த 2008-2009-ம் ஆண்டு கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ.3,21,500/-யை காட்டிலும் ரூ.4,000/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.3,66,089/- யை காட்டிலும் ரூ.40,589/- குறைவாகவும் உள்ளது. எனவே திரு. C.R. வினாயகம் அவா்களின் உச்ச கேள்வியை ஏற்று (ரூ.1,35,625/- 01.11.2009 முதல் 31.03.2010 வரை 5 மாத காலத்திற்கு) கணபதி நவீன கட்டண கழிப்பிடத்தை வசூல் செய்யும் உரிமையை ஒப்படைக்கவும்,**

**இனம் எண்.5-க்கு திரு. A. அஸ்கா் அலி என்பவரால் கேட்கப்பட்ட ஏல உச்ச கேள்வியான ரூ.2,11,200/- கடந்த 2008-2009-ம் ஆண்டு கேட்கப்பட்ட உச்ச கேள்வியான ரூ.2,07,000/-யை காட்டிலும் ரூ.4200/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.2,78,667/- யை காட்டிலும் ரூ.67,467/- குறைவாகவும் உள்ளது. எனவே திரு. A. அஸ்கா் அலி அவா்களின் உச்ச கேள்வியை ஏற்று (ரூ.88,000/-யை 01.11.2009 முதல் 31.03.2010 வரை 5 மாத காலத்திற்கு) சத்தி ரோடு ஆடு, மாடு அறுவைமனை வசூல் செய்யும் உரிமையை ஒப்படைக்கவும், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.9, நாள்.29.10.2009-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**மேற்கண்ட இரண்டு இனங்களுக்கும் 01.11.2009-ம் தேதியன்று உரிமை ஒப்படைக்க வேண்டியுள்ளதால், அவசர அவசியத்தினை கருதி வணக்கத்தற்குரிய மேயா் அவா்களின் ஒப்புதல் பெற்று மேற்படி இனங்களை ஒப்படைப்பு செய்ததற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம்** **ந.க.எண்: 15012/2008/அ4 (வ)**

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 134 நாள் : 30.11.2009</u>**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 9 நாள். 29.10.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 24**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – 2010–2013ம் ஆண்டிற்கு குத்தகை இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படை செய்வது – தொடர்பாக.

* * * * * *

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனங்களை 2010–2013ம் ஆண்டிற்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி நடத்தப்பட உள்ளது.

**2009–2010ம் ஆண்டு ஏல இனங்கள்**

| வ. எண். 1. | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல இனங்கள் 2. |
|---|---|
| 1) | தியாகி குமரன் மார்க்கெட்டில் தரைக் கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் தியாகி குமரன் அங்காடிக்கு மேட்டுப்பாளையம் சாலை மொத்த வியாபாரம் மண்டியில் இருந்து வரும் சரக்கு வண்டிகளைத் தவிர மற்ற பகுதிகளில் இருந்து வரும் சரக்கு வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை, மாநகராட்சி நிரந்தரக் கடைகள் நீங்கலாக, |
| 2) | ராமர் கோவில் வீதி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3) | போத்தனூர் ரோடு லாரிப்பேட்டைமொத்த வியாபார மீன் மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 4) | போத்தனூர் ரோடு லாரிப் பேட்டையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 5) | தியாகி குமரன் மார்க்கெட்டின் உட்புறத்தில் உள்ள இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 6) | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 7) | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 8) | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 9) | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதளக் கேரேஜ் பகுதி மற்றும் 5வது தளப்பகுதியில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம், |
| 10) | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கடை உரிமதாரர்களுக்கு வாகனம் நிறுத்த ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாக) |
| 11) | இராஜவீதியில் மருந்தக வளாகத்தில் இரு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம், |
| 12) | குரு ஹோட்டல் அருகில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 13) | அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தின் முன்புறம் அமைந்துள்ள இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 14) | வ.உ.சி.பூங்காவில் மிருகக்காட்சி சாலைக்கு நுழைவுக் கட்டணம் மற்றும் சிறுவர் விளையாடும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம், |
| 15) | கழிவுநீர் பண்ணையில் உள்ள ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 16) | பொருள் காப்பகம் உக்கடம் பேருந்து நிலையம் |
| | நவீன கழிப்பிடங்களில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் |
| 17) | நவீன பொதுக் கழிப்பிடம், தியாகி குமரன் மார்க்கெட் |
| 18) | நவீன பொதுக் கழிப்பிடம், லிங்கப்ப செட்டி வீதி, |
| 19) | நவீன பொதுக் கழிப்பிடம், உக்கடம் பேருந்து நிலையம் |

| | | |
|---|---|---|
| 20) | நவீன பொதுக் கழிப்பிடம், | போத்தனூர் ரோடு, லாரிப்பேட்டை, |
| 21) | நவீன பொதுக் கழிப்பிடம், | காந்திபுரம் நகர பேருந்து நிலையம், (ஆர்.வி. ஹோட்டல் அருகில்) |

| நவீன பொதுக் கழிப்பிடங்கள் | | |
|---|---|---|
| 22) | நவீன பொதுக் கழிப்பிடம், | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் (தளம் -1, தளம்-2, தளம்-3, தளம் -4) |
| 23) | நவீன பொதுக் கழிப்பிடம், | வ.உ.சி. பூங்கா வளாகம் |
| 24) | நவீன பொதுக் கழிப்பிடம், | உப்பிலிபாளையம் |
| 25) | நவீன பொதுக் கழிப்பிடம், | டவுன்ஹால் அருகில், |
| 26) | நவீன பொதுக் கழிப்பிடம், | செட்டிவீதி |
| 27) | நவீன பொதுக் கழிப்பிடம், | தர்மராஜா கோவில் வீதி |
| 28) | நவீன பொதுக் கழிப்பிடம், | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அருகில். (பி-3 காவல் நிலையம் அருகில்) |

மேற்குறிப்பிட்டுள்ள 2009–2010ம் வருடத்திய குத்தகை இனங்களில் கீழ்குறிப்பிட்டுள்ள இனங்களை நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | இனம் எண். | இனம் | நீக்கம் செய்யப்படுவதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. | 3 | லாரிபேட்டை மொத்த மீன் வியாபார மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | இவ்வினத்தை மீன் வளர்ச்சித் துறைக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதால் நீக்கம் செய்யப்படுகிறது. |
| 2. | 19 | நவீன கட்டண கழிப்பிடம் உக்கடம் பேருந்து நிலையம். | பேருந்து நிலையங்களில் உள்ள நவீன கழிப்பிடங்கள் மட்டும் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து நிலையம் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டிலிருந்து மாநகராட்சி பேருந்து நிலையத்துடன் சேர்த்து நவீன கட்டண கழிப்பிடங்களையும் பராமரித்து கொள்ளவும் பேருந்து நிலையங்களில் போதுமான காவலர்கள் நியமித்து பாதுகாப்பு செய்வதுடன் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கவும், மேலும் பேருந்து நிலையம் மற்றும் கழிப்பறைகளுக்கு வர்ணம் செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளவும் தனியார் பங்களிப்புடன் கழிப்பிடங்களை புதுப்பித்து கட்டிக் கொள்ளவும் அதற்கு தேவையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளதால் 2009–10 ஆண்டு ஏல இனங்களில் வரிசை எண்.19, 21, 22 மற்றும் 28 ஆகிய இனங்களை 2010–13 ஆண்டு ஏல பட்டியலில் இருந்து நீக்கம் செய்யலாம். |
| 3. | 21 | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் ஆர்.வி ஹோட்டல் எதிரில். | |
| 4. | 22 | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம். | |
| 5 | 28 | நவீன கட்டண கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (B3 காவல் நிலையம் அருகில்) | |

<u>2010–2013ம் ஆண்டுக்கு புதியதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்கள்.</u>

1) வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2) காந்திப்புரம் மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்.

3) உக்கடம் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம்.

மேற்படி இறுதி செய்யப்பட்ட குத்தகை இனங்களை அரசாணை (நிலை) எண்.78 நாள்.25.05.09 தெரிவித்துள்ளப்படி வருடாந்தர குத்தகை இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை தற்போது நடைமுறையில் உள்ள ஓராண்டுக்கு பதிலாக மூன்றாண்டுகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் வழங்கலாம்.

1. உரிமையாணை இனங்களை ஒப்படைக்கும் தேதி முதல் 30.03.2013 முடிய மூன்று நிதியாண்டு காலத்திற்கு ஏலம்விடலாம்.
2. மேற்படி இனங்கள் அனைத்திற்கும் ஆண்டு உரிமை தொகை அடிப்படையில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும்.
3. ஆரம்பத்தில் ஏலத்தில் பெறப்படும் உரிமத் தொகைகள் இரண்டாம் ஆண்டில் 5 % சதவீத உரிமத்தொகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டு உரிமத்தொகையில் 5% உரிமத்தொகை உயர்வு செய்யப்படும்.
4. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவுற்குள் கட்டணம் வசூலிக்கும் உரிமதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு அவ்வுரிமம் வழங்கப்படும். வாரிசுதாரர்கள் விருப்பம் இல்லையெனில் அவ்வுரிமம் மறு ஏலம் விடப்படும்.
5. முதல் வருட உரிம தொகை முழுவதையும் உரிமம் உறுதி செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். இரண்டாம் ஆண்டு உரிம தொகையினை முதலாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மூன்றாம் ஆண்டு உரிம தொகையினை இரண்டாம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் செலுத்த வேண்டும். மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் உரிமத்தொகை செலுத்தாவிடில் இம்மாநகராட்சியின் 2010–2013 ஆம் வருட உரிம இனங்களுக்கான ஏல நிபந்தனைகளில் கண்டுள்ளவாறு உரிமம் ரத்து செய்யப்பட்டு ஏலதாரர் பொறுப்பில் மறு ஏலம் விடப்படும்.
6. உரிமதாரர்கள் செலுத்திய வைப்பு தொகைகளை மூன்று வருட உரிம காலம் முடிந்த பின்னரே திரும்பி வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி அரசாணையில் தெரிவித்துள்ள விபரங்களை மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளில் சேர்க்கலாம். மேலும் ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளில் கீழ் குறிப்பிட்டுள்ளபடி மாற்றம் செய்யலாம்.

1. இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்படும் அனைத்து வாகனம் நிறுத்தும் இடங்களுக்கும் வசூலிக்கப்படும் கட்டணமானது 6 மணி நேரத்திற்கு மட்டும் பொருந்தும். அதன் பிறகு நிறுத்தப்படும் ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கும் முறையே கட்டணம் வசூலிக்கப்படும்.

2. உரிமம் பெற்றவர் மாநகராட்சிக்கு ஏல நிபந்தனைகளை ஏற்று கொண்டதற்கினங்க அளிக்கப்படும் ஒப்பந்த பத்தரம் ரூ.20 மதிப்புள்ள முத்திரை தாளில் அளிப்பதற்கு பதிலாக ரூ.100 மதிப்புள்ள முத்திரை தாளில் பெறலாம்.

மேற்படி 2009–2010 ஆம் ஆண்டு ஏல இனங்களில் வரிசை எண் 1 முதல் 28 வரையிலான வருடாந்திர உரிம இனங்களுடன் புதிதாக சேர்க்கப்பட்ட மூன்று இனங்களையும் 2010–2013ஆம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

நீக்கம் செய்யப்பட வேண்டிய இனங்களை 2009–2010 ஆம் ஆண்டு ஏல பட்டியலிருந்து நீக்கம் செய்யலாம்.

மேற்படி ஏல நிபந்தனை அறிக்கையினை 200 பிரதிகள் அச்சிட்டுப் பெறவும், மாவட்ட அரசிதழ் பதிவில் வெளியிடவும் ஏற்பாடு செய்யலாம். மேலும், ஏல அறிக்கையினை நாளேடுகளில் விளம்பரம் செய்து இவைகளுக்காகும் செலவினங்களை ஏற்கலாம்.

இப்பொருளின் மீது அவசர அவசியத்தை கருதி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெறப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண்.9659/2009/அ1

மாநகர மன்ற தீர்மானம் எண் 135 நாள் : 30.11.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்

மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 25

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், சீனிவாசபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தை பராமரிக்க தனியாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரிமக்காலம் 09.07.2009-உடன் முடிவடைவதால் மீண்டும் ஏலம் நடத்த வேண்டியது அவசியமாக உள்ள நிலையில், மேற்கண்ட திருமண மண்டபம் உள்ள இடத்தில் பலமாடி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது,

தற்போது மீண்டும் ஏலம் நடத்தி தனியார் பராமரிப்பிற்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளதால் ஏற்கனவே உள்ள உரிமதாரருக்கு கட்டிடப்பணியை தொடங்கும்வரை உரிமகாலத்தை நீடித்து வழங்க 12.06.2009-ந் தேதிய ஆணையாளரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மேலும், கோவை மாநகராட்சி, கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் தமது கடித எண்-41102/06/JN-4, நாள்-30.06.2009-ன்படி மேற்படி பணிகளுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இப்பணிகள் துவங்க இன்னும் 6 மாத கால அவகாசம் தேவைப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, உரிமதாரரால் கடைசியாக செலுத்தப்பட்ட ஓராண்டு உரிமக் கட்டணமான ரூ.1,73,938/-ல், 15% உயர்வு செய்து ரூ.2,00,030/- என நிர்ணயம் செய்து, 10.07.2009 முதல் 09.01.2010 வரை ரூ.1,00,015/- செலுத்தி ஆறுமாத காலத்திற்கு நீட்டித்து வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண்.6 நாள்: 07.09.09-ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. இது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 13081/2003/அ4 (வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 136 நாள் : 30.11.2009</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 6 நாள். 07.09.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 26

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் - வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பட்டியலில் பெயர் சேர்க்க அனுமதி கோர மன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் -தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 72 வார்டுகளில் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு பயனாளிகள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். அதன் அடிப்படையில் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட 585 விண்ணப்பங்கள் சர்வே செய்யப்பட்டுள்ளது. அதில் இறந்துபோன 11 நபர்களைத்தவிர 574 பயனாளிகளின் பட்டியலை வறுமைக்கோட்டிற்குக் கீழ்உள்ள பட்டியலில் சேர்க்கவும் வகை பெறப்பட்டுள்ளது. மேலும் இச்சேர்க்கை இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வு ஊதியம் வழங்குவதற்கும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களும் 60 வயதுக்குக் கீழ் உள்ள ஆதரவற்ற விதவைகளும் சேர்ப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக மாமன்றத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 1237/2007/ME6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 137 நாள் : 30.11.2009</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்

---

**பொருள் எண் 27**

**கோவை மாநகராட்சி பில்லூர் முதலாவது குடிநீர் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்கப்பட்டுள்ள இராமகிருஷ்ணாபுரம் முதன்மை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து மாநகராட்சியின் கிழக்கு பகுதியான சிங்காநல்லூர் பகுதியிலுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு கொண்டு செல்லும் பிரதான குடிநீர் விநியோக குழாயும், சக்தி சாலையிலிருந்து இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் சாலை, ஹட்கோ சாலை, விளாங்குறிச்சி சாலை, தண்ணீர் பந்தல் சாலை, மசக்காளிபாளையம் சாலை வழியே டி.ஜே.நகர் முதல் நீர்த்தேக்கத் தொட்டி வரை 6.90கி.மீ நீனத்திற்கு அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் குழாய் 600 மி.மீ விட்டம் முதல் 450 மி.மீ விட்டம் வரை மிகுந்த காற்றழுத்தம், பிறபகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்படுவதால் ஏற்படும் அழுத்தம் காரணமாக அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பெரும்பாலான பகுதியில் தடைபடுகிறது. இதனால் பொது மக்கள் விநியோகத்தால் சிரமம் அடைவதுடன் அடிக்கடி சாலை மறியல் நடத்துகின்றனர்.**

**கோவை மாநகராட்சியின் கிழக்கு மற்றும் வடக்கு மண்டலத்தின் ஒரு பகுதியான, இப்பகுதியில் பில்லூர் முதலாவது குடிநீர் திட்டத்தில் பதிக்கப்பட்ட பிரதான மற்றும் பகிர்மான குழாய்களுக்கும் இம்மண்டல பகுதியில் முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளில் புதிதாக பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் குடிநீர் விநியோகத்திற்கும், போதுமான அழுத்தத்துடன் குடிநீர் வழங்குவதற்கு பில்லூர் முதலாவது திட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பிரதான குழாயின் மூலம் குடிநீர் முழுமையாக விநியோகம் செய்ய இயல முடிவதில்லை.**

**இதனால் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் விநியோகம் செய்வதில் கால இடைவெளியும், பொது மக்களின் அதிருப்தியும் மாநகராட்சியின் மீது ஏற்படுவதால் மேற்குறிப்பிட்டுள்ள சாலையின் வழியே அமைக்கப்பட்டுள்ளதால் அடிக்கடி பழுது மற்றும் உடைப்பு ஏற்படும் பிரதான குழாயினை 6.90 கி.மீ நீளத்திற்கு உரிய அளவுள்ள டக்டைல் அயன் (Ductile Iron) என்ற உறுதியான குழாய்கள் கொண்டு சக்தி சாலையிலிருந்து தண்ணீர் பந்தல் சாலை, அவினாசி சாலை வழியாக பதிக்க ரூ. 7.00 கோடி உத்தேச மதிப்பீடு தொகையினை அரசிடமிருந்து இயக்கம் மற்றும் பராமரிப்பு மானிய நிதி பெற்றும், கூடுதலாக தேவைப்படும் நிதியினை முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தொகையிலிருந்து செலவழித்து மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக்குறிப்பு- அனுமதிக்கலாம்.</u>** **ந.க.எண்: 13855/2009/எம்.டி.2**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 138 நாள் : 30.11.2009</u>

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 28**

**கோயம்புத்தூர் மாநகராட்சி-தெற்கு மண்டலம், கோயம்புத்தூர் ரூரல் கிராமம், சர்வே எண்கள் 57, 58/1, 58/2, 59/1, 59/3, 60/1, 60/3, 65/1, 65/2, 66/1 , 66/2, 74, 93, 95, 96/1, 96/2, 97/1, 97/2, 98/2, 99, 100/1, 100/2, 100/3, 101, 102/1, 102/2, 103/1, 104, 105, 106, 107, 108, 109, 110,111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120,121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129/2, 130/2, 131/2, 132/2, 133, 134/2, 135, 136, 137, 138, 139/1, 139/2, 140/1, 140/2, 141/1, 141/2, 142, 143, 144, 145, 146/2, 146/3, 147/2, 148/1, 149, 150, 151, 152, 153/1, 154, 158, 159, 160, 168, 169/1 இல் உள்ள 122 ஏக்கர் நிலம் சர்வே மற்றும் வருவாய்த் துறையின் ஆவணங்களின்படி கோவை மாநகராட்சிக்கு சொந்தமானது ஆகும். அதில் சர்வே எண்கள் 65/1, 65/2, 66/1, 66/2 மற்றும் 74 ல் உள்ள 7.51 ஏக்கர் நிலம் முழுமைத்திட்டத்தின்படி குடியிருப்பு நில உபயோகமாக உள்ளது. மொத்தமுள்ள 122 ஏக்கர் நிலத்தில் 7.51 ஏக்கர் நிலம் தவிர மீதமுள்ள 114.49 ஏக்கர் நிலம் கோயம்புத்தூர் ரூரல் அபிவிருத்தி திட்டம் எண் 3 மற்றும் முழுமைத்திட்டத்தின் படி விவசாய நில உபயோகமாக உள்ளது. பல ஆண்டுகளாக கழிவு**

நீா்ப்பண்ணை உபயோகத்திலிருந்து வந்த இந்நிலத்தில் தற்சமயம் கழிவு நீா் பாய்ச்சுவது நிறுத்தப்பட்டுள்ளது. 60 அடி அகல உக்கடம் பைபாஸ் சாலையும், இவ்விடத்தினூடே செல்லும் 60 அடி அகல மாநகராட்சி சாலையும் இந்நிலத்திற்கு அணுகு சாலைகளாக உள்ளன.

இந்நிலத்தில் மத்திய, மாநில அரசுகள் மற்றும் கோயம்புத்தூா் மாநகராட்சியின் பங்களிப்போடு ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புர புனரமைப்புத் திட்டம் - ஏழைகளுக்கான குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சி முலம் 9600 குடியிருப்புகளும் , தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் முலம் 3384 வீடுகளும் கட்ட உத்தேசித்து, அதற்குரிய ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது. இக்குடியிருப்புகளில் நிா் நிலைப்புறம் போக்கு, சாலைகள் மற்றும் அரசு நிலங்களில் ஆட்சேபகரமான முறையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவா்களை குடியமா்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நில உபயோக மாற்றம் மற்றும் பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் மாமன்ற தீா்மான எண் 83 நாள்.28.5.2008, 72 நாள்.11.9.2009 மற்றும் 75 நாள். 30.9.2009-ன் படி தீா்மானிக்கப்பட்டது. நகா் ஊரமைப்பு ஆணையா் அலுவலகத்தில் கேட்டு கொண்டதற்கிணங்க உக்கடம் பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 122 ஏக்கா் நிலப்பரப்பில் கீழ்கண்டவாறு நில உபயோக மாற்றம் செய்ய ஒருங்கிணைந்த மாமன்ற ஒப்புதல் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

1. ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புர புனரமைப்புத்திட்டத்தின் கீழ் சா்வே எண்கள் 134,137pt,138,139/1,2,140/1pt,140/2pt,147/2pt,148/1pt,149pt,150,151,152,153, 154, 158, 159pt 168,169/1 இல் உள்ள 15.80 ஏக்கா் நிலத்தில் நவீன கழிவு நீா் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனைச் சாா்ந்த திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது. அதனால் அப்பகுதியான 15.80 ஏக்கா் நிலத்தை விவசாய நில உபயோகமாக நிலை நிறுத்தவும்.

2. சா்வே எண்கள் 65/1,65/2,66/1,66/2 மற்றும் 74 ல் உள்ள 7.51 ஏக்கா் நிலம் தற்சமயம் லாரிபேட்டையாக உள்ளது. முழுமைத்திட்டத்தில் குடியிருப்பு நில உபயோகமாக உள்ள இந்நிலத்தை வணிக நில உபயோக மாற்றம் செய்யவும், பல அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும்,

3. லாரி பேட்டை இடத்தின் அருகில் உள்ள சா்வே எண்கள் 57 pt,58/2 pt, இல் உள்ள 1.82 ஏக்கா் நிலத்தில் மீன் மாா்க்கெட் இயங்கி வருகிறது. முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகமாக உள்ள இந்நிலத்தை வணிக நில உபயோகமாக மாற்றவும், மற்றும் பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும்,

4. சா்வே எண்கள் 57/pt, 58/1, 58/2pt, 59/1, 59/3, 60/1, 60/3, 93, 95, 96/1, 96/2, 97/1, 97/2, 98/2, 99, 100/1, 100/2, 100/3, 101, 102/1,102/2, 103/1, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129/2, 130/2, 131/2, 132/2, 133, 134/2pt, 135, 136, 137pt, 138pt, 140/1pt, 140/2pt, 141/1, 141/2, 142, 143, 144, 145, 146/2, 146/3, 147/2pt, 148/1pt, 149/pt, 159/pt, 160. இல் உள்ள 96.87 ஏக்கா் நிலத்தை முழுமைத்திட்ட விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றவும், பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும்,

5. பொருளில் வரிசை எண் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள 7.51 ஏக்கா் நிலம், வரிசை எண் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள 1.82 ஏக்கா் நிலம் மற்றும் வரிசை எண் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள 96.87 ஏக்கா் நிலம் ஆகமொத்தம் 106.20 ஏக்கா் நிலத்தினை பலஅடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1 ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புர புனரமைப்புத்திட்டத்தின் கீழ் சா்வே எண்கள் 134,137pt,138,139/1,2,140/1pt,140/2pt,147/2pt,148/1pt,149pt,150,151,152, 153, 154, 158, 159pt 168,169/1 இல் உள்ள 15.80 ஏக்கா் நிலத்தில் நவீன கழிவு நீா் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனைச் சாா்ந்த திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது. அதனால் அப்பகுதியான 15.80 ஏக்கா் நிலத்தை விவசாய நில உபயோகமாக நிலை நிறுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2 சா்வே எண்கள் 65/1,65/2,66/1,66/2 மற்றும் 74 ல் உள்ள 7.51 ஏக்கா் நிலம் தற்சமயம் லாரிபேட்டையாக உள்ளது. முழுமைத்திட்டத்தில் குடியிருப்பு நில உபயோகமாக உள்ள இந்நிலத்தை வணிக நில உபயோக மாற்றம் செய்யவும், பல அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3 லாரி பேட்டை இடத்தின் அருகில் உள்ள சா்வே எண்கள் 57 pt,58/2 pt, இல் உள்ள 1.82 ஏக்கா் நிலத்தில் மீன் மாா்க்கெட் இயங்கி வருகிறது. முழுமைத்திட்டத்தில்

விவசாய நில உபயோகமாக உள்ள இந்நிலத்தை வணிக நில உபயோகமாக மாற்றவும், மற்றும் பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4 சர்வே எண்கள் 57/pt, 58/1, 58/2pt, 59/1, 59/3, 60/1, 60/3, 93, 95, 96/1, 96/2, 97/1, 97/2, 98/2, 99, 100/1, 100/2, 100/3, 101, 102/1,102/2, 103/1, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129/2, 130/2, 131/2, 132/2, 133, 134/2pt, 135, 136, 137pt, 138pt, 140/1pt, 140/2pt, 141/1, 141/2, 142, 143, 144, 145, 146/2, 146/3, 147/2pt, 148/1pt, 149/pt, 159/pt, 160. இல் உள்ள 96.87 ஏக்கர் நிலத்தை முழுமைத்திட்ட விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றவும், பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

5 பொருளில் வரிசை எண் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள 7.51 ஏக்கர் நிலம், வரிசை எண் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள 1.82 ஏக்கர் நிலம் மற்றும் வரிசை எண் 4ல் குறிப்பிடப்பட்டுள்ள 96.87 ஏக்கர் நிலம் ஆகமொத்தம் 106.20 ஏக்கர் நிலத்தினை பலஅடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.எண்.13089/2006/எம்.எச்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 139 நாள் 30.11.2009</u>

அலுவலகக் குறிப்பு 1, 2, 3, 4, 5 ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி